## கர்த்தாவை நல்ல பக்தியாலே

கர்த்தாவை நல்ல பக்தியாலே
எப்போதும் நம்பும் நீதிமான்
எத்தீங்கிலேயும் அவராலே
அன்பாய்க் காப்பாற்றப் படுவான்
உன்னதமான கர்த்தரைச்
சார்ந்தோருக்கவர் கன்மலை

அழுத்தும் கவலைகளாலே
பலன் ஏதாகிலும் உண்டோ
நாம் நித்தம் சஞ்சலத்தினாலே
தவிப்பது உதவுமோ
விசாரத்தாலே நமக்குத்
தீங்கதிகரிக்கின்றது

உன் காரியத்தை நலமாகத்
திருப்ப வல்லவருக்கு
நீ அதை ஒப்புவிப்பாயாக
விசாரிப்பார், அமர்ந்திரு
மா திட்டமாய்த் தயாபரர்
உன் தாழ்ச்சியை அறிந்தவர்

மன்றாடிப்பாடி கிறிஸ்தோனாக
நடந்து கொண்டுன் வேலையை
நீ உண்மையோடே செய்வாயாக
அப்போ தெய்வாசீர்வாதத்தைத்
திரும்பக் காண்பாய் நீதிமான்
கர்த்தாவால் கைவிடப்படான்